பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | வைகாசி 21 புதன்கிழமை 03.06.2020 | கதிர் 210

**இது ரகசியம் அல்ல!**

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான மனுக்களை விசாரணைக்கு ஏற்பதில்லை என்ற உயர்நீதிமன்ற முடிவு வந்து விட்டது. இனி என்ன?

கொரோனா அச்சுறுத்தல் தணிந்திருப்பது போல தோன்றுவதால் பக்கம் 02 ›››

# எந்நேரத்திலும் கூட்டமைப்பு பொதுத்தேர்தலுக்குத் தயார்

## உயர்நீதிமன்றத்தின் இறுதி முடிவை மதிக்கின்றோம் என்கிறார் சம்பந்தன்



**கொழும்பு, ஜூன் 03**

**நாடாளுமன்றத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சவால் அல்ல. நாம் எந்நேரத்திலும் தேர்தலை எதிர் கொள்ளத் தயாராக இருக்கின்றோம். எனவே, சுகாதார விதிமுறைகளின்படி அமைதியான - நீதியான - தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே எமது விருப்பம்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திரு கோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.** 2

## மக்களின் ஜனநாயக உரிமை உயர்நீதிமன்றால் பாதுகாப்பு

### மஹிந்த அணி வரவேற்பு

கொழும்பு, ஜூன் 03

மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை உயர்நீதிமன்றத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது. இது பலம் வாய்ந்ததொரு வெற்றியாகும். நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து பிற்போடுவதற்கு எதிர்த்தரப்பினர் முன்னெடுத்த சூழ்ச்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன.

- இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலை விரைவாக நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: - 2

## தேர்தல் திகதி இன்று முடிவு

### தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

நாடாளுமன்றத் தேர்தல் திகதியை சவாலுக்குட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளபோதிலும் தேர்தல் எப்போது நடைபெறும் என்ற தீர்மானம் இன்று நடைபெறும் கலந்துரையாடலின் பின்னரே 2

## நீதிமன்றம் வழங்கிய கட்டளை நல்ல தீர்ப்பு

### தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ஹூல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

உயர்நீதிமன்றம் நேற்று வழங்கிய கட்டளை நல்லதொரு தீர்ப்பு என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார். 2

## ஆளும் தரப்பினரின் பங்காளியே ஐ.தே.க.

### சஜித் தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 03

ஆளும் தரப்பினரின் பங்காளிக் கட்சியினராகவே சிறிகொத்த தரப்பினர் உள்ளனர் என சஜித் ஆதரவு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், சிறிகொத்தவிலுள்ள சிறியளவிலான ஐக்கிய தேசியக் கட்சியினர், இன்று மொட்டுக் கட்சியின் அடிவருடிகளாக மாறியுள்ளனர். 2

## இன்றைய தெரிவே நாளைய விடியல்!

### சிறந்த அரசை நாமே நிர்ணயிக்க வேண்டும் என சங்கக்கார 'ருவிட்'

கொழும்பு, ஜூன் 03

எங்களுடைய இன்றைய தெரிவுகளே நாளை எங்கள் பிள்ளைகள் சுவீகரிக்கப் போகும் கலாசாரதைத் தெரிவு செய்யும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தற்போது நிலவும் சூழ்நிலை தொடர்பில் தனது ருவிட்டர் பதிவில் குமார் சங்கக்கார பதிவிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது ருவிட்டர் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

இனவாதம் மற்றும் அநீதிக்கு எதிரான அமெரிக்க மக்களின் செயற்பாடுகள் 2

### தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு முன்

## ராஜபக்ஷ ஆட்சி தொடர்பில் மக்கள் சிந்திப்பது அவசியம்

### சஜித் அணியினர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 03

நாட்டு மக்கள் அனைவரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு முன்னர் ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சி தொடர்பில் சிந்திக்க வேண்டும். அது தொடர்பில் தீர்மானம் எடுத்த பின்னரே வாக்களிக்க வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அசோக்க அபேசிங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில், இதுவரையில் புதிய நாடாளுமன்றம் நியமிக்கப்படாமல் ஆட்சி இடம்பெற்று வருகின்றது. இதனால் இந்தக் காலப்பகுதி நாடாளுமன்றம் 2

## ஆளும் தரப்பினரின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் செயற்பாடுகளை விமர்சிப்பதை விடுத்து, அரசுடன் இரகசிய உடன்படிக்கைகளைச் செய்துக் கொண்டு, ஒத்துழைத்துச் செல்லத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

இதன் ஒரு பகுதியாகத்தான், ரணில் - ரவி - அகில உள்ளிட்ட தரப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிக்கும் எம்மை, கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இதிலிருந்தே ஐக்கிய மக்கள் சக்தி எனும் எமது கூட்டணி மீதான இவர்களின் பயம் வெளிப்படுகிறது. இன்று மத்திய வங்கி பிணைமுறி மோசடியாளர்கள் கூட வெளியில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அரசுக்கும், இந்தக் குழுவினருக்கும் இடையிலான உடன்படிக்கைக்கு இணங்கவே இன்று அனைத்தும் இடம்பெற்று வருகின்றன. இவர்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் என்று கூட நாம் கூற விரும்பவில்லை. உண்மையான ஐக்கிய தேசியக் கட்சியினர் எம்முடன்தான் இருக்கிறார்கள்.

கட்சியின் ஆதரவாளர்களும் எம்முடன்தான் இருக்கிறார்கள். இன்று சிறிகொத்தவின் இலக்கும், அரசின் இலக்கும் நாமாகத்தான் இருக்கிறோம். சஜித் பிரேமதாஸவை நோக்கி அனைத்துக் குண்டுகளும் வீசப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன - என்றார்.

## நீதிமன்றம் வழங்கிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தேர்தல் திகதி மற்றும் ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ண ஜீவன் ஹூல் கருத்துத் தெரிவிக்கையில் -

உயர்நீதிமன்றம் வழங்கிய கட்டளை நல்லதொரு தீர்ப்பு. தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமானது. எங்களை அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள், இப்படிச் செய்யுங்கள் என்று எந்த அறிவுறுத்தலையும் உயர்நீதிமன்றம் வழங்கவில்லை. எங்களைச் சுயாதீனமான இயங்கும் வகையில் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியுள்ளது - என்றார்.

## எந்நேரத்திலும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றக் கலைப்பு மற்றும் தேர்தல் திகதி தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள இறுதியான முடிவை நாம் மதிக்கின்றோம். இனிமேல் அதை நாம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகவும், தேர்தல் திகதிக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதில்லை என்ற முடிவை பிரதம நீதியரசர் உட்பட ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் நேற்று ஏகமனதாக எடுத்து அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் 'காலைக்கதிர்' நேற்று வினாத் தொடுத்தது. அதற்கு அவர் மேற்கண்டவாறு பதில் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர்நீதிமன்றத்தின் இறுதி முடிவையடுத்து நாட்டின் தற்போதைய நிலைமைக்கேற்ற மாதிரி தேர்தலை நடத்துவதற்கான திகதி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் கூடி தீர்மானம் எடுக்கவுள்ளனர் என நாம் அறிந்தோம். அதை நாம் வரவேற்கின்றோம். எமது ஒத்துழைப்புகளை வழங்குவோம். சுகாதார விதிமுறைகளின்படி அமைதியான - நீதியான - தேர்தல் முக்கியம் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம் - என்றார்.

## இன்றைய தெரிவே நாளைய ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவருக்கும் ஒரு தெளிவான பாடமாக அமைந்துள்ளது.

நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், அது அமெரிக்காவாக இருந்தாலும் சரி, அல்லது இலங்கையாக இருந்தாலும் சரி, அல்லது போனால் வேறொரு நாடாக இருந்தாலும் சரி, நமது உணர்வுகளையும் உணர்திறனையும் தீர்மானிக்க வேண்டியது அரசு அல்ல. அது உங்களதே அல்லது என்னுடைய விருப்பம்.

நமது ஞானம், இரக்கம், பச்சாத்தாபம் மற்றும் புரிதலை அரசு தீர்மானிக்கக் கூடாது.

நம் இதயங்கள் மற்றும் மனதின் வெளிப்படைத்தன்மையை மற்றவர்கள் கட்டுப்படுத்த முடியாது அல்லது வேறுபாடு மற்றும் வேறுபாடுகளைத் தழுவி மதிப்பிடுவதற்கான நமது திறனை கட்டுப்படுத்தவே முடியாது.

அதை நாமே தெரிவு செய்கின்றோம். எங்கள் பிரதிநிதிகளையும் நாங்கள் எங்கள் சொந்த மக்களிடமிருந்தே தெரிவு செய்கின்றோம். அவ்வாறு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் அரசுக்குக் கொண்டு வரும் குணநலன்களுக்கு நாங்களே பொறுப்பு. அவர்களின் மாற்றத்துக்கும் நாங்களே பொறுப்பு. அவர்களது இயல்பை நமது செல்வாக்கு தீர்மானித்துள்ளது..

எங்கள் தெரிவுகள் அரசின் அணுகுமுறைகள், செயல்கள், கொள்கை மற்றும் சட்டத்தை வழிநடத்துகின்றன. சிறந்த அரசையும் சிறந்த ஆட்சியையும் நிறுவ நாம் சிறந்த மனிதர்களாக இருக்க வேண்டும்.

அந்தவகையில், எங்கள் பலங்களும் பலவீனங்களும் ஒருவருக்கொருவர் நடத்தை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் நடத்தை ஆகியவற்றில் பிரதிபலிக்கின்றன.

மரியாதை மற்றும் புரிதல் ஆகியவற்றால் உலக கலாசாரத்தை அமைப்பதற்கு, சாதாரண குடிமகனான நாம் ஒன்றாக இணைந்து அசாதாரணமான மாற்றத்தை அடைய முடியும். அறியாமைக்கும் தப்பான எண்ணத்துக்கும் இடமில்லாத, உண்மையான சுதந்திரம் ஆட்சி செய்யும் உலக கலாசாரம்.

நாம் தைரியமாக இருக்க வேண்டும், நம்பிக்கையுடன் இருக்க வேண்டும், நாம் முன்னெடுக்கும் பயணத்தில் தீவிரமாக இருக்க வேண்டும்.

எங்களுடைய இன்றைய தெரிவுகளே நாளை எங்கள் பிள்ளைகள் சுவீகரிக்கப் போகும் கலாசாரத்தைத் தெரிவு செய்யும்.

எங்கள் வாழ்க்கையைப் பற்றி நாம் பெருமைப்பட விரும்பினால், எங்கள் பிள்ளைகள் எங்கள் பாரம்பரியத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வதை பார்க்க விரும்பினால், நாம் சிறந்தவர்களாக இருப்போம். நம் குழந்தைகளுக்காக, ஒருவருக்கொருவர், நம்மிடம் அதைக் கோருவோம் - என்றுள்ளது.

## தேர்தல் திகதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் தொடர்பான மனுக்களை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ள நிலையில் இன்று காலை அது குறித்து ஆணைக்குழு கூடி தீர்மானங்களை எடுக்கும். ஆணைக்குழுவின் இதர உறுப்பினர்களும் கூட்டத்துக்கு வருவார்கள். அடுத்த கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி நடத்த நேற்றுக் காலை ஆணைக்குழு கூடியபோது தீர்மானிக்கப்பட்டது. ஆனால், உயர்நீதிமன்றத்தின் நேற்றைய தீர்ப்பையடுத்து இன்று காலை ஆணைக்குழு அவசரமாகக் கூடவுள்ளது. இதன்போது தேர்தல் எப்போது நடைபெறும் என்ற தீர்மானத்தை எடுப்போம் - என்றார்.

## மக்களின் ஜனநாயக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமை மற்றும் ஜூன் மாதம் 20ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தத் தீர்மானித்தமை ஆகிவற்றுக்கு எதிராக எதிரணியினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைப் பரிசீலனை செய்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அவற்றை முழுமையாகத் தள்ளுபடி செய்துள்ளது.

எதிர்த்தரப்பினர் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு எதிராக முன்னெடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் இன்று தோல்வியடைந்துள்ளன.

நல்லாட்சி அரசு மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான தேர்தல் உரிமையைத் தொடர்ந்து பிற்போட்டது. உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் கடந்த அரசு பிற்போட்டதைத் தொடர்ந்து நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமையவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2018ஆம் ஆண்டு நடைபெற்றது.

மாகாண சபைத் தேர்தலும் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு காலவரையறையின்றி பிற்போடப்பட்டது.

எதிர்த்தரப்பினர் தங்களின் கட்சி உள்ளகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகப் பொதுத்தேர்தலைத் தொடர்ந்து பிற்போட முயற்சி செய்தார்கள். இவர்களது முயற்சி உயர்நீதிமன்றத்தால் தோற்கடிக்கப்பட்டது. உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகக் காணப்படுகின்றது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கருத்தில்கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழு பொதுத்தேர்தலை விரைவாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுகாதாரப் பாதுகாப்புடன் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகவும் உள்ளது. தேர்தலை நடத்துவதற்கு அரசு உரிய ஒத்துழைப்பை வழங்கும் - என்றார்.

# கொரோனா தொற்று 1,656; நேற்று 13 பேர் அடையாளம்

கொழும்பு, ஜூன் 03

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 07 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 11.30 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியவர்களின் எண்ணிக்கை 1,656 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று கடற்படையைச் சேர்ந்த 03 பேரும், டுபாயிலிருந்து வந்த ஒருவரும், ரஷ்யாவிலிருந்து வந்த ஒருவரும், கடற்படையைச் சேர்ந்த தொற்றாளருடன் தொடர்புடைய ஒருவரும் என 13 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் தற்போது 822 பேர் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். 823 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அத்துடன் இதுவரை 11 பேர் மரணமடைந்துள்ளனர்.

இதேவேளை, மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொடர்பான சந்தேகத்தின் அடிப்படையில் 65 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## ராஜபக்ஷ ஆட்சி தொடர்பில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படாமல் ஆட்சி இடம்பெற்ற காலப்பகுதியாக வரலாற்றில் பதியப்படும். தற்போது இடம்பெறும் ஆட்சி முறை ஜனநாயக பண்புமிக்கதா? அல்லது அரசமைப்புக்கு அமைவானதா? அல்லது சர்வாதிகாரமானதா? என்பது தொடர்பில் மக்களே சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசை உருவாக்குவதற்காகப் பெரும் பங்காற்றியவர்களே இன்று அரசின் போக்கை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர்.

மத்திய வங்கியின் நிதி முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர்களான நிஹால் பொன்கோ, துஷ்டி வீரக்கோன் ஆகியோர் தங்களின் பதவிகளைத் துறந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் நிதி முகாமைத்தும் முறையாக இடம்பெறாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அரசின் தலையீட்டின் காரணமாகவே இவ்வாறு தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் தங்களது பதவியிலிருந்து விலகுகின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைவருக்கும் பொதுவாகச் சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்கிறார். ஆனால், இந்தப் பொதுவானச் சட்டத்தின் செயற்பாடு தொடர்பில் அண்மையில் ஒரு விடயத்தை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மரண நிகழ்வில் இந்தப் பொதுவானச் சட்டம் எவ்வாறு இயங்கியது என்பது தொடர்பில் மக்கள் தெளிவுற்றிருப்பார்கள்.

தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஔடதங்களுக்கு விலைக்கட்டுப்பாடு இல்லை. அரச ஊழியர்களின் ஊதியத்திலிருந்து அரைப்பகுதி அவர்களுக்கு அறிவிக்காமலே அரசால் அபகரிக்கப்பட்டுள்ளது.

உலகச் சந்தையில் எண்ணெய் விலை குறைந்துள்ள போதிலும் அதன் பயன்கள் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. தனியார் துறையைச் சேர்ந்த ஒரு லட்சம் பேருக்குத் தொழில் பறிபோகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்காலத்தில் எதிர்நோக்க வேண்டிய இடர்மிகு தருணத்தில் நாடு உள்ளது.

தற்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியமை போன்று நாங்களும் மக்களிடம் இப்போது நலமா? என்று கேட்கின்றோம். நலம் என்றால் எதிர்வரும் பொதுத்தேர்தலின்போதும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்து அவர்களை ஆட்சியில் அமர்த்துங்கள் என்று ஜனாதிபதித் தேர்தலின்போது அவர்களுக்கு ஆதரவாக வாக்களித்த 69 இலட்சம் மக்களிடம் நாங்கள் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாடே பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள நிலையில் வீதிகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கு சீனா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து பல மில்லியன் ரூபாய்களை கடனாகப் பெறுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இந்தக் கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் இது அவசியம் தானா?

இதேவேளை, அமைச்சர் பந்துல குணவர்தன ஹோமாகமவில் விளையாட்டு அரங்கை அமைப்பதென உறுதியாக இருக்கின்றார். பொதுத் தேர்தலை நடத்துவதற்காகக் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்றால், நாம் எதற்காக முகக்கவசம் அணிய வேண்டும். அரசின் திருப்தியற்ற செயற்பாடுகள் தொடர்பில் மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும். அரசின் செயற்பாடுகளை மக்கள் மறந்துவிடுவார்கள் என்று எண்ணியே அது செயற்பட்டு வருகின்றது. எதிர்க்கட்சி என்றவகையில் நாங்கள் அவற்றை நினைவுபடுத்துகின்றோம். நாட்டு மக்களே சிந்தித்துத் தீர்மானம் எடுக்க வேண்டும் - என்றார்.

# கிளிநொச்சி முகமாலையின் புலிகளின் சீருடையுடன் மனித எச்சங்கள் இருந்த இடத்தில் மீண்டும் அகழ்வு

கிளிநொச்சி, ஜுன் 03

கிளிநொச்சி – முகமாலை பகுதியில் விடுதலைப் புலிகளின் சீருடையுடன் காணப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வு நேற்றைய தினம் இடம் பெற்றது.

கிளிநொச்சி – பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட முகமாலை பகுதியில் கடந்த 22 ஆம் திகதி கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் விடுதலைப்புலிகளின் சீருடைகளுடன் காணப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக பளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதற்கமைய கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிபதி த. சரவணராஜா முன்னிலையில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் சீருடையுடனான மனித எச்சங்கள் மற்றும் ஆயுதங்கள் சில மீட்கப்பட்டன.

இந்த நிலையில் நேற்றையதினம் இரண்டாம் கட்ட அகழ்வு கிளிநொச்சி மாவட்ட நீதிபதி த.சரவணராஜா முன்னிலையில் இடம் பெற்றது.

நேற்றைய தினமும் மகசின் – 02, வெடிக்கும் தோட்டா – 34, வெடித்த கப் – 6, சயனைட் – 1, தகடு – 1 மற்றும் பச்சை இராணுவ சீருடையுடனான மனித எச்சங்கள் சில மீட்கப்பட்டன.

இப்பகுதியில் மூன்றாம் கட்ட அகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்கிழமை இடம்பெற உள்ளது.



யாழ். மாநகராட்சி மன்றத்தின்

## நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்களை அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஜுன் 03

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால், நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் வெளியிடப்படும் நல்லைக்குமரன் ஆன்மீக மலரின் 28 ஆவது இதழுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்களை அனுப்பி வைப்பதற்கான இறுதி நாள் இம்மாதம் 19 ஆம் திகதி ஆகும்.

ஆக்கங்கள் வேறெந்த நூலிலும் வெளிவராதவையாக இருத்தல் வேண்டும். ப4 தாளில் 5 முதல் 7 பக்கங்களுக்கு உட்பட்டதான ஆக்கங்களை மின்னஞ்சல் மூலம் saivasamaya - vivaharamgmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது தலைவர், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு, யாழ்ப்பாணம் மாநகர சபை அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இறுவட்டு மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும், நாட்டின் தற்போதைய நிலைமையில், சுகாதார முன்னேற்பாடுகளைக் கருத்தில் கொண்டு மலர் வெளியீடு பற்றிய தீர்மானம் அறிவிக்கப்படும் எனவும் யாழ். மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார்

## 14 முன்னாள் அமைச்சர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கையாம்

### வீடுகளை மீளக் கையளிக்காமையால்

உத்தியோகபூர்வ அரச இல்லங்களில் இருந்து வெளியேறாத முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இது தொடர்பில் அரச நிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட 14 உத்தியோகபூர்வ இல்லங்கள் இதுவரை மீளக் கையளிக்கப்படவில்லை என அரச நிர்வாக அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட 22 உத்தியோகபூர்வ இல்லங்களில் 8 இல்லங்கள் மாத்திரமே இதுவரை மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஏனைய 14 இல்லங்களும் இதுவரை கைளிக்கப்படவில்லை என அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் புதிதாக தெரிவாகும் அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதில் சிக்கல்களை எதிர் நோக்க நேரிடும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## மாங்குளம் – ஒட்டுசுட்டான் வீதியில் பயணிகளை அச்சப்படுத்தும் யானை



முல்லைத்தீவு, ஜுன் 03

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் – ஒட்டுசுட்டான் பிர தான வீதியில் காட்டு யானைக ளால் வீதியில் பயணிக்கும் மக்கள் மற்றும் வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக அண்மைய நாட்களாக முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியின் வனப்பகுதிகளில் வீதியோரத்தில் காட்டு யானை வீதியால் செல்பவர்களை அச்சுறுத்தி வருகின்றது.

இதேவேளை அண்மையில் இந்த வீதியால் சென்ற வயோதிபர் ஒருவர் யானையின் தாக்குதலுக்கு இலக்கா கியிருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியின் 17 ஆவது கிலோமீற்றர் பகுதியில் வீதியோரத்தில் வருகைதந்த யானையினால் அந்த வீதியால் பய ணித்த பயணிகள் பல்வேறு அச்சுறுத் தல்களுக்கு முகம் கொடுத்தனர். அவர்கள் வீதியைக் கடப்பதற்குத் தயங்கி நின்று பயணித்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அந்த யானை சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக வீதியோரத்தில் நின்று இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## சந்திர, சூரிய கிரகணங்கள் இரண்டும் இந்த மாதத்தில்!



ஜனவரி 10 தொடக்கம் 11 வரையான காலப்பகுதியில் இந்த ஆண்டின் முதல் கிரகணமாக சந்திரகிரகணம் தோன்றியது.

இந்நிலையில் தெளிவற்ற சந்திர கிரகணம் ஜுன் 5 முதல் 6 வரை நள்ளிரவில் நடக்க உள்ளது. அத்துடன் ஜுன் 21 ஆம் திகதி ஆண்டின் முதல் சூரிய கிரகணம் நிகழ உள்ளது.

ஜுன் 5 ஆம் திகதி, சந்திர கிரகணம் இரவு 11:15 மணிக்கு தொடங்கி ஜுன் 6 ஆம் திகதி 2:34 மணி வரை நீடித்து முடிகிறது. இந்த கிரகணம் ஸ்ட்ராபெரிமூன் கிரகணம் (Strawberry Moon Eclipse) என்று அழைக்கப்படுகிறது.

பகுதி சந்திர கிரகணமாக நிகழும் இந்த நிகழ்வின் போது 57 வீதம் நிலவு மறைக்கப்படும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவிக்கின்றது.

இந்த கிரகணம் மொத்தமாக மூன்று மணி நேரமும் பதினெட்டு நிமிடங்கள் வரை நீடிக்கப் போகிறது.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட ஆசியநாடுகள், ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, பசுபிக் பிராந்தியம், தென் அமெரிக்காவின் தென் கிழக்கு பகுதிகள், அத்திலாந்திக், இந்திய பெருங்கடல், அண்டாட்டிக்கா ஆகிய இடங்களில் இந்த சந்திர கிரகணத்தை பார்க்க முடியும்.

2020 ஆம் ஆண்டின் முதல் சூரிய கிரகணம் ஜுன் 21 ஆம் திகதி நடக்க உள்ளது. இந்த நிகழ்வு காலை 10.16 மணிக்கு தொடங்கி காலை 11.49க்கு உச்சமடைகிறது. பின்னர் மதியம் 1.30க்கு இந்த கிரகணம் விடுபடுகிறது. மொத்தம் 3 மணி நேரம் 14 நிமிடங்கள், 24 விநாடி வரை நீடிக்கிறது.

இந்த சூரிய கிரகணம் இலங்கை, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், தெற்கு சீனா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எத்தியோப்பியா, கொங்கோ மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகிய நாடுகள், தென்கிழக்கு ஐரோப்பாவில் நாம் காண முடியும்.

## மணமகன் தேவை

1992 இல் பிறந்த கல்வியியல் கல்லூரிப் பயிற்சி பெற்ற உத்தரட்டாதி 1 ஆம் பாத நட்சத்திரமுடைய தங்கள் மகளுக்கு 1986 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த அரச அல்லது வங்கிச் சேவையில் உள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்பு - 077 986 1127

## சிங்கப்பூரிலிருந்து 291 பேர் மீண்டனர்

கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடிகாரணமாகசிங்கப்பூரில் சிக்கித் தவித்த 291 இலங்கையர்கள் ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல். 303 ரக விசேட விமானம் மூலம் நேற்று மாலை நாடு திரும்பியுள்ளனர்.

இந்தப்பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று மாலை 4.15 மணியளவில் வந்தடைந்தனர் .

# நமது பார்வை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு

நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி விடுத்த உத்தரவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஏழு அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தனது முடிவை உயர்நீதிமன்றம் வழங்கி விட்டது.

இந்த மனுக்களைத் தொடர்ந்து விசாரணைக்கு ஏற்பதில்லை என்பது உயர்நீதிமன்றத்தின் ஏகமனதான தீர்மானம்.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் பத்து நீண்ட நாள்கள் உயர்நீதிமன்றம் விசாரணை நடத்தியது.

ஆனால் நேற்று உயர்நீதிமன்றத்தின் முடிவு ஒரு நிமிட நேரத்துக்குள் அறிவிக்கப்பட்டு முடிந்து விட்டது.

உயர்நீதிமன்றத்தின் இந்த முடிவு தொடர்பில் பல விடயங்கள் அவதானத்தில் கொள்ளத்தக்கவை.

நாட்டின் மிக உயர்ந்த – உச்சநிலை – நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட முடிவு இது. அதுவும் அந்த நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்த முடிவுக்கு எதிராக மறுசீராய்வோ, மேளாய்வோ இனிமேல் சாத்தியம் இல்லை. இதுதான் முடிந்த முடிவு.

அந்த முடிவிலும் கூட சில மயக்கங்கள் உண்டு.

இந்த ஏழு மனுக்களுக்கு எதிராகவும் எதிர்மனுதாரர்களாலும் இடையீட்டு மனுதாரர்களாலும் எழுப்பப்பட்ட அனைத்துப் பூர்வாங்க ஆட்சேபனைகளும் பெரும்பான்மையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டுகின்றன என்று கூறிய நீதியரசர்கள், ஆனால், மனுக்களைத் தொடர்ந்து விசாரணைக்கு ஏற்பதில்லை என்ற ஏகமனதாக முடிவுக்குத் தாங்கள் வந்திருக்கின்றனர் என்றும் அறிவித்திருக்கின்றனர்.

இந்த அறிவிப்பில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – அனைத்துப் பூர்வாங்க ஆட்சேபனைகளையும் நீதியரசர்கள் நிராகரித்துள்ளனர். ஆனால் அந்த முடிவில் நீதியரசர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு இருந்திருக்கின்றது. எனவே ஒவ்வொரு பூர்வாங்க ஆட்சேபனையும் பெரும்பான்மை எண்ணிக்கையின் முடிவின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்தது – ஆனாலும் மனுக்களைத் தொடர்ந்து விசாரணைக்கு ஏற்பதில்லை என்பதில் நீதியரசர்கள் அனைவரும் ஏகமனதான முடிவை எடுத்திருக்கின்றார்கள்.

எதிர்மனுதாரர்களின் பூர்வாங்க ஆட்சேபனைகள் அனைத்தும் நிராகரிக்கப்படுமானால், எதன் அடிப்படையில் மனுக்களைத் தொடர்ந்து விசாரணைக்கு அனுமதிக்காமல் நிராகரிக்கும் முடிவு எட்டப்படுகின்றது என்ற வினாத்தொக்கி நிற்கின்றது.

உயர்நீதிமன்றத்தின் முடிவை யாரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது. எனினும், இந்த முடிவின் அடிப்படையில் இப்படி ஒரு பிரதான கேள்வி – சந்தேகம் – நியாயமாக எழுந்திருப்பதையும் யாரும் மறுக்கவும் முடியாது.

மனுக்களை விசாரணைக்கு ஏற்க மறுத்த தனது தீர்மானத்துக்கான காரணங்களை உயர்நீதிமன்றம் வெளியிடவில்லை. தாமதித்து வெளியிடுமா என்பதும் தெரிவிக்கப்படவில்லை.

மனுக்களை விசாரணைக்கு ஏற்பது தொடர்பான தீர்மானம் பற்றிய விவகாரத்தில் உயர்நீதிமன்றம் தனது முடிவுக்கான காரணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை.

சில சமயம் வெளியிடலாம். வெளியிடாமலும் போகலாம். ஓரிரு நாள்கள் கழித்தோ, வாரங்கள் கழித்தோ அதனை உயர்நீதிமன்றம் வெளியிடவும் கூடும். வெளியிட வேண்டும் என யாரும் வற்புறுத்த முடியாது. அது உயர்நீதிமன்றத்தின் – அந்த ஆயத்தின் – முடிவைப் பொறுத்தது.

ஆனால் இவ்விவகாரத்தை ஒட்டி இரண்டு விடயங்கள் இருக்கின்றன. அவற்றைச் சுட்டிக் காட்டுவது நமது கடமையாகின்றது. இந்த வழக்குகள் வெறுமனே மனுதாரர்களுக்கும் அரசுக்கும் இடையிலான தல்ல. முழு நாட்டினதும் வாக்காளர்களுடனும் பிரஜைகளுடனும் சம்பந்தப்பட்ட – நேரடியாகத் தொடர்புபட்ட – வழக்கு. இந்த வழக்கில் என்ன நடந்தது, உயர்நீதிமன்றம் என்ன தீர்மானத்தை – ஏன் – எடுத்தது என்பதை அறியும் உரிமை நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு.

'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, நிலைநாட்டுவது போல காட்டப்படவும் வேண்டும்' (Justice must not only be done, but must be seen to be done) என்பது நீதித்துறையின் மகுட வாக்கியங்களுள் ஒன்று. அதன்பிரகாரம் உயர்நீதிமன்றம் நேற்று நிலைநாட்டியது நீதியான தீர்ப்பு என்பது மக்களுக்கு உணர்த்தப்படுவதற்கு அதன் முடிவுக்கான காரணங்கள் மக்கள் முன் வைக்கப்படுவது அவசியமாகின்றது.

அதேசமயம், இது வரலாற்று முக்கியத்துவம் மிக்க வழக்கு, நாடாளுமன்றத்தின் தனித்துவம் தொடர்பில் உலகளாவிய ரீதியில் எதிர்காலத்தில் இடம்பெறக் கூடிய வழக்குகளுக்கு முன்மாதிரியாக – வழிகாட்டு உத்தரவாக – இலங்கை உயர்நீதிமன்றத்தின் இந்த முடிவு காட்டப்படக் கூடியது. அதற்கும் கூட நீதிமன்றத்தின் முடிவுக்கான காரணங்களுடனான விளக்கம் அவசியமானதாகின்றது.

உயர்நீதிமன்றம் தன் முடிவுக்குக் காரணங்களைத் தருமா? தெரியவில்லை. பார்த்திருப்போம்.

# தேயிலைக் கொழுந்து பறித்த வேளை குளவி கொட்டி பெண் தொழிலாளி பலி

## 7 பேர் படுகாயம் லிந்துலவில் பரிதாபம்

கண்டி, ஜூன், 03

லிந்துல, சென்ஜேம்ஸ் மேற்பிரிவு தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளையில் குளவி கொட்டியதனால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், 7 பேர் கடுமையான காயங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றனர்

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் லிந்துல, சென்கூம்ஸ் மேற்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 55 வயதுடைய காசிம் அலிமா என்ற நான்கு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

சென்கூம்ஸ் மேற்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்துக் கொண்டிருந்த போது மலையில் இருந்த குளவிக் கூடொன்று கலைந்து வேலைசெய்து கொண்டிருந்தவர்களைத் தாக்கியுள்ளது.

இதன் போது காயமடைந்த 5 பெண்கள் உட்பட 8 பேர் காயமடைந்த நிலையில் பொது மக்களின் உதவியுடன் லிந்துல வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் இந்த பெண் உயிரிழந்துள்ளார்.

ஏனைய 7 பேரும் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் லிந்துல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலோலி பாடசாலை காவல் ஊழியர் சடலமாக மீட்பு!

புலோலிப் பகுதியில் உள்ள பாடசாலையில் பணியில் இருந்த காவலாளி நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புலோலி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் காவலாளி நேற்று முன்தினம் இரவு பணிக்குச் சென்ற நிலையில், நேற்றுக் காலை அவர் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். பணியில் இருந்த போது, ஏற்பட்ட மாரடைப்பு காரணமாகவே காவலாளி உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# கடற்படையினர் 767 பேர் பாதிப்பு

## வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் 529 பேர் கொரோனாவுக்கு இலக்கு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்ட 1,656 பேரில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 804 பேர் அடங்குகின்றனர். இதில் 767 பேர் கடற்படையினர் எனவும், அவர்களில் 415 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர் எனவும் கடற்படையின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்களில் 529 பேர் இதுவரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடவடிக்கைகள் இனி எகிறத் தொடங்கும்.

மீண்டும் கொரோனாத் தொற்று எகிறாத வரையில் சிக்கல் இல்லை. எங்கேனும் ஓர் ஓட்டைக்குள் பொத்துக் கொண்டு கொரோனா புகுந்தால் மீண்டும் தேர்தல் களேபரமாகும்.

தேர்தல் முடியும் வரை கொரோனா அடங்கியிருக்க வேண்டும் என்று தேர்தல் வெற்றியை நம்பியிருக்கும் அரசியல்வாதிகள் எல்லோரும் நேர்த்தி வைப்பார்கள் என்பது நிச்சயம்.

பொதுத் தேர்தல் எப்போது என்பதைத் தேர்தல் ஆணையம் இன்று காலை கூடித் தீர்மானிக்கும் என்று கூறப்படுகின்றது.

மீண்டும் தேர்தலை அறிவித்து – வேட்பாளர்களுக்குரிய இலக்கங்களை வழங்கி – ஏழு வாரங்களாவது, அதாவது 35 நாள்களாவது – பிரசாரத்துக்கு தர வேண்டும் என்பது தான் விதிமுறை.

வழமையாகப் பொதுத்தேர்தல்களை சனிக்கிழமைகளில்தான் நடத்துவது முறைமை.

ஆகவே, இப்போது உடனடியாகத் தேர்தல் திகதியை அறிவித்தாலும் ஜூலை 18 சனிக்கிழமை வரை பிரசாரத்துக்குக் காலம் தேவைப்படும்.

அதற்கு அடுத்த சனிக்கிழமை ஜூலை 25ஆம் திகதி நடத்தலாம். அப்படி ஜூலை 25ஆம் திகதியை தீர்மானிப்பதில் இரண்டு சிக்கல்கள் உள்ளன.

ஒன்று – மிகக் குறுகிய காலம் என்பதால் ஆயத்த வேலைகளை விழுந்தடித்து அவசரப்பட்டு செய்ய வேண்டியிருக்கும்.

அடுத்தது – அது கறுப்பு ஜூலை தினத்தை ஒட்டி வருவது. 1983இல் தமிழர்களுக்கு எதிராகத் தெற்கில் கறுப்பு ஜூலை கட்டவிழ்ந்த காலம் என்பதால் தமிழர் தரப்பு அதனை எதிர்க்கும், சிக்கல்கள் வரும் என்று தேர்தல் ஆணையம் கருதக் கூடும்.

அதற்கு அடுத்த சனிக்கிழமை ஓகஸ்ட் முதலாம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள் விடுமுறை. ஆகையால் பெரும்பாலும் அதற்கு அடுத்த சனிக்கிழமை ஓகஸ்ட் 8ஆம் திகதியே தேர்தல் நாளாக அறிவிக்கப்படக் கூடும்.

எது, எப்படி என்றாலும் முடிவு பெரும்பாலும் இன்று மாலை தெரிந்து விடும்.

தேர்தல் சட்டங்களை மாற்ற முடியாது. இருக்கின்ற சட்டங்களுக்கு அமைவாக – கொரோனாப் பிரச்சினையையும் எதிர்கொள்ளும் விதத்தில் – தேர்தல் நடவடிக்கை முறைகளை மாற்றியமைப்பது குறித்து தேர்தல் திணைக்களம் ஆராய்கின்றது.

உதாரணமாகத் தேர்தலில் வாக்களிக்க வருவோருக்கு கையைத் தொட்டுக் கைவிரல் மையைப் பூசாது, கைவிரலுக்கு மையை ஸ்பிரே செய்வது, வாக்களிக்கப் பயன்படுத்தும் பென்சிலைத் தொற்று நீக்கியில் அமிழ்த்தி வைத்திருப்பது, விசாலமான அறையில் வாக்களிப்பை நடத்துவது, வாக்களிக்கக் காத்திருப்போருக்கிடையே சமூக இடைவெளியைப் பேணுவது, பிரசார அணிகளில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது, வாக்குச் சீட்டுக்களை அலுவலர்கள் கையுறைகள் அணிந்து கையாள்வது போன்ற பல திட்டங்கள், ஏற்பாடுகள் குறித்துப் பேசப்படுகின்றது.

தேர்தல் சட்டங்களின்படி வாக்களிப்பை இரண்டு நாள்களுக்கு மாற்ற முடியாது. ஒரே நாளில்தான் நடத்த வேண்டும்.

எனினும் வாக்கு எண்ணிக்கை நடவடிக்கையை இரண்டாகப் பிரிப்பதற்கு ஆலோசிக்கப்படுகின்றதாம்.

முதல் நாளில் வாக்குகளை எண்ணி கட்சி ரீதியான முடிவுகளை அறிவிப்பது என்றும் – விருப்பு வாக்குகளை அடுத்த நாளைக்கு எண்ணலாம் என்றும் – ஆலோசிக்கப்படுகின்றதாம். அப்படிச் செய்தால் வாக்கு எண்ணிக்கை இடத்தில் ஆள்கள் திரளுவதைக் கட்டுப்படுத்த முடியும் என அதிகாரிகள் எண்ணுகின்றார்கள்.

எது, எப்படி என்றாலும் தேர்தல் ஆணையத்தின் இன்றைய கூட்டம் மிக முக்கியமானதாக இருக்கப்போகின்றது.

நேற்று நாட்டின் முழுக் கவனமும் ஐந்து நீதியரசர்களின்பால் இருந்தது.

இன்று நாட்டின் முழு ஊடகங்களின் கவனமும் மூன்று தேர்தல்ஆணையாளர்களின் மீதும் திரும்பி இருக்கின்றது.

பார்க்கலாம், இன்று என்ன முடிவு எடுக்கப்பட போகின்றது என்பதை...!

–மின்னல்–

# ஸ்பெயினில் உயிரிழப்பு ஏதுமற்ற 24 மணி நேரம்

## மார்ச் மாதத்தின் பின்னர் முதல் தடவையாகப் பதிவு




ஸ்பெயின் நாட்டில் கடந்த மார்ச் மாதத்திற்குப் பிறகு தற்போது நேற்று முதல் தடவையாக 24 மணி நேரத்தில் கொரோனாவால் யாரும் உயிரிழக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் இத்தாலிக்கு அடுத்தபடியாக ஸ்பெயினில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகமாக இருந்தது. கடந்த மார்ச் மாதத்தில் இருந்து மே முதல் வாரம் வரை கொரோனா அங்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதுவரை ஸ்பெயினில் 2 லட்சத்து 40 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 27 ஆயிரத்து 127 பேர் உயிரிழந்துள்ளனர்.

மார்ச் மாதத்தில் இருந்து உயிரிழந்தோர் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்தது. ஏப்ரல் 2ஆம் திகதி உச்சக் கட்டமாக 950 பேர் ஒரு நாளில் உயிரிழந்தனர். அதன் பின் உயிரிழப்பு படிப்படியாக குறைய ஆரம்பித்தது.

கடந்த 24 மணி நேரத்தில் இறப்பு ஏதும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் 70 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதத்தில் இருந்து ஸ்பெயின் அரசு பல்வேறு தளர்வுகளை அறித்துள்ளது. மலாகாவில் உள்ள கடற்கரை பகுதிகள் மக்களுக்காக திறந்து விடப்பட்டுள்ளன.

# 94 வயதிலும் ராணி எலிசபெத் பிரிட்டனில் குதிரைச் சவாரி



வின்ட்சர் கோட்டையில் உள்ள மைதானத்தில் 94 வயதான பிரிட்டிஷ் ராணி இரண்டாம் எலிசபெத் கம்பீரமாகக் குதிரைச் சவாரி செல்லும் படங்கள் வெளியாகி படுவேகமாகப் பரவி வருகின்றன.

பிரிட்டனில் கொரோனா வைரஸ் தொற்று பரவத் தொடங்கியதுமே ராணி இரண்டாம் எலிசபெத் (வயது 94), கணவர் இளவரசர் பிலிப்புடன் (98) பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து வெளியேறினார்.

அவர்கள் வின்ட்சர் கோட்டையில் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுடன் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்கள் மட்டுமே உள்ளனர்.

கொரோனாவுக்குப் பின்னர் ராணி இரண்டாம் எலிசபெத் பொதுவெளியில் தோன்றவில்லை.

ஊரடங்கு காலத்தில் அபூர்வ நிகழ்வாக அவர் தொலைக்காட்சியில் தோன்றிப்பேசினார். அப்போது அவர் கொரோனா வைரசுக்கு எதிரான போராட்டத்தில் பிரிட்டன் வெற்றி பெறும் என்று கூறினார். ஊரடங்குக்கு ஒத்துழைப்பு வழங்கும் மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்த நிலையில் அவர் வின்ட்சர் கோட்டையில் உள்ள மைதானத்தில் வார இறுதி நாளில் குதிரையில் சவாரி சென்றார். 14 வயதான குதிரை மீது அவர் கம்பீரமாக சவாரி செல்லும் படங்கள் வெளியாகி இருக்கின்றன. ஊரடங்கு தொடங்கிய பின்னர் அவர் பொது வெளியில் தோன்றியது இதுவே முதல் முறை.

# எச்சரிக்கிறது ஐரோப்பிய ஒன்றியம் !



கறுப்பின அமெரிக்கர் ஜோர்ஜ் பிளாய்ட் விவகாரத்தால் ஐரோப்பிய ஒன்றியம் அதிர்ச்சியடைந்து, திகைத்துப்போகிறது. இது அதிகார முறைகேடு. அதிகப்படியான சக்தியைப் பயன்படுத்துவதற்கு எதிராக எச்சரிக்கை விடுக்கிறோம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தது. பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸல்ஸில் இன்று நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது அந்த ஒன்றியத்தின் ஐரோப்பிய உயர் பிரதிநிதி ஜோசப் பொரெல் இவ்வாறு தெரிவித்தார். அமெரிக்க மக்களைப் போலவே, ஜோர்ஜ் பிளாய்டின் சாவால் நாங்கள் அதிர்ச்சியடைகிறோம், திகைக்கிறோம். அதிகப்படியான சக்தியைப் பயன்படுத்துவதற்கு எதிராக அனைத்து சமூகங்களும் விழிப்புடன் இருக்க வேண்டும்' என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கை தலைவரான ஜோசப் பொரெல் செய்தியாளர்களிடம் மேலும் கூறினார்.

# கொரோனா பலவீனமடையவில்லை

## இத்தாலிக்கு உலக சுகாதார நிறுவனம் பதில்

கொரோனா வைரஸ் இன்னும் பலமான உயிர்க் கொல்லி வைரஸாகவே இருக்கிறது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இத்தாலியைச் சேர்ந்த சான்ரபேல் மருத்துவமனையின் தலைவர் ஜாங்க் ரிலோவின் கூற்றுக்குப் பதிலளிக்கும் விதமாகவே உலகசுகாதார அமைப்பு இவ்வாறு தெரிவித்தது. இது குறித்து தெரியவருவதாவது: கொரோனா தொற்று பலவீனம் அடைந்து வருகிறது என்றும் கொரோனா வைரஸ் மருத்துவ ரீதியாக இத்தாலியில் இனி இல்லை என்றும் ஜாங்க் ரிலோ தெரிவித்தார். இந்தக் கருத்தை மறுத்த உலக சுகாதார அமைப்பின் மருத்துவ அவசர கால நடவடிக்கையின் தலைவர் மைக்ரியான், கொரோனா வைரஸ் இன்னும் உயிர்க்கொல்லி வைரசாகவே இருக்கிறது. நாம் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். வைரஸ் பலவீனமாகத் தோன்றலாம். ஏனென்றால் நாம் சிறப்பாகச் செயற்பட்டு கொண்டிருக்கிறோம். அதற்கு வைரஸ் பலவீனம் அடைந்து வருவதாக அர்த்தம் இல்லை என்று தெரிவித்தார்.

# கொரோனா தடுப்பூசியை பரிசோதிக்கிறது ரஷ்யா



ரஷ்யாவில் இந்த மாதம் கொரோனா தடுப்பூசி பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படும் என்று ரஷ்யாவின் தொழில், வர்த்தக அமைச்சர் டெனிஸ் மாண்டுரோவ் தெரிவித்தார். ரஷ்யாவில் உள்ள பிரபல மருந்து நிறுவனங்களான பயோகாட் மற்றும் ஜெனிரியம் ஆகியவை கூட்டாக தடுப்பூசிகளை உருவாக்கி உள்ளன. இந்தத் தடுப்பூசிகளைப் பரிசோதிப்பது இந்த மாதம் ஆரம்பித்து விடும். என்று ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் நேற்று கொரோனா வைரஸ் தொற்று பதிலளிப்புக் கூட்டத்தில் பேசியபோது டெனிஸ் மாண்டுரோவ் தெரிவித்தார். உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றுக்குத் தடுப்பூசி கண்டுபிடித்து பரிசோதனைகள் முடித்து சந்தைக்கு கொண்டு வருவதில் பல நாடுகளிடையே கடும் போட்டி நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் அமைப்புகள் ஏன் மௌனம்?

## டேரன் சமி கேள்வி



அமெரிக்காவில் கொல்லப்பட்ட ஜோர்ஜ் பிளாய்ட் விவகாரம் குறித்து மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டேரன் சமி கேள்வி எழுப்பியுள்ளார். பன்னாட்டுக் கிரிக்கெட் அமைப்பு மற்றும் கிரிக்கெட் சங்கங்களிடம், ஏன் இந்த மௌனம், இது மௌனத்துக்கான நேரமல்ல. நிறவெறி, சமூக அநீதிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய காலம் என்றுள்ளார் டேரன் சமி. 'நிறவெறி அமெரிக்காவுடன் முடிவடைவதில்லை, இது உலகம் முழுதும் உள்ளது. எங்களுக்காக, கருப்பரினத்தவருக்காக நீங்கள் நீதி கேட்க மாட்டீர்களா? அநீதிகளுக்கு எதிராகப் பேச மாட்டீர்களா? இது அமெரிக்கா சம்பந்தப்பட்டது மட்டுமல்ல, நான் உங்கள் குரல்களை கேட்க விரும்புகிறேன்' என்று தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# சிறையிலுள்ள நளினி, முருகன் உறவினர்களுடன் பேச ஏன் தடை?

## தமிழக அரசிடம் நீதிமன்றம் கேள்வி



ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதிகளாக உள்ள நளினி, முருகன் ஆகியோர் அவர்தம் உறவினர்களுடன் பேசுவதற்கு அனுமதி மறுப்பதேன் என்று தமிழக அரசிடம் சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

நளினியின் தாய் பத்மாஇ சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் இலங்கையில் உள்ள முருகனின் தாயார் சோமனியம்மாளிடம் தினமும் 10 நிமிடம் வாட்ஸ் அப் செயலி மூலம் பேசவும் லண்டனில் உள்ள முருகனின் தங்கையுடன் பேசவும் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

முருகனின் தந்தை காலமான போது, அவரது உடலை குறித்த முறையில் பார்க்க முருகனுக்கு தமிழக அரசு அனுமதி மறுத்ததையும் மனுவில் சுட்டிக்காட்டினார். இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது கேள்வி எழுப்பிய நீதிபதிகள்இ நளினிஇ முருகன் தமிழர்கள்தானே? சட்டமன்றத்தில் ஏழு பேரை விடுதலை செய்ய தீர்மானம் நிறைவேற்றிய தமிழக அரசுஇ உறவினர்களிடம் பேச அனுமதி மறுப்பது ஏன்? ஏன் இந்த முரண்பாடு? அரசு மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

# விளை பொருள்களுக்கு இனிக் கட்டணம் இல்லை

## தமிழக அரசு சட்டம் இயற்றியது

தமிழகம்,ஜூன்2

விவசாய விளைபொருள்களுக்கு விற்பனை கட்டணம் அறவிடக் கூடாது என்று தமிழக அரசு அவசர சட்டம் ஒன்றைப் பிறப்பித்துள்ளது. இது குறித்துத் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாடு விவசாய விளைபொருள்கள், விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1987இல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு அரசு அவசர சட்டம் பிறப்பித்துள்ளது. இந்தச் சட்டம், வேளாண் விளைபொருள்களை விவசாயிகள் தங்கள் விருப்பத் திற்கேற்ப, தமிழகத்திலுள்ள எந்தவொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், அங்கீகரிக்கப்பட்ட தனியார் சந்தைகளிலும், அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு நேரடியாக விற்பனை செய்வதற்கு வழிவகுக்கும்.

மேலும் எந்தவொரு சூழ்நிலையிலும் விவசாயிகள் தங்கள் விவசாய விளைபொருள்களை விற்பனை செய்யும் பொழுது அவர்களிடமிருந்து விற்பனைக் கட்டணம் அறவிடப்படக்கூடாது என்றுள்ளது.

# அசாமில் கடும் மழை நிலச்சரிவால் 20 பேர் சாவு



இந்தியாவின் அசாம் மாநிலத்தின் தெற்குப்பகுதியில் உள்ள பாரக் பள்ளத்தாக்கில் கடந்த இரண்டு நாள்களாகப் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 20 பேர் சாவடைந்தனர். காச்சர், ஹெய்ல்கண்டி பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் தலா 7 பேரும், கரீம்கஞ்ச் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 6 பேரும் சாவடைந்தனர்.

மாநில பேரிடர் மீட்புப்படையினர், தீயணைப்பு படையினர் மீட்புப்பணியில் ஈடுபட்டனர். 7 பேர் காயமடைந்து 3 மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இந்தியாவின் பெயரை மாற்ற கோரும் வழக்கு ஒத்திவைப்பு

இந்தியாவின் பெயரை 'பாரத்' என்று மாற்று மாறு கோரி நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் அந்த வழக்கு விசாரணைகளை மறு திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தது இந்திய உச்ச நீதிமன்றம். 'பாரத்' என்பதே இந்தியாவின் உண்மையான பெயர் என்று இந்த மனுவில் கூறுகிறார் நமஹா எனும் மனுதாரர், அவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்படுவது விடுதலைக்காக போராடியவர்களுக்கு நியாயம் செய்யும் என்றும் இந்திய விழுமியங்களுக்கு ஏற்றதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் இந்த மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



# மக்கள் நெருக்கமே நோய் பரவக் காரணம்

## சென்னை குறித்து முதல்வர் தெரிவிப்பு

சென்னையில் கொரோனா வைரஸ் பரவல் அதிகமாக இருப்பதற்கு அங்கு மக்கள் நெருக்கம் அதிகமாக இருப்பதே முக்கிய காரணம் என்று தமிழக முதல்வர் தெரிவித்தார். சென்னையில் அதிகரித்துவரும் கொரோனா தொற்று குறித்து சென்னை மாநகராட்சி அதிகாரிகள், அமைச்சர்கள், காவல் உயர் அதிகாரிகளுடன் முதல்வர் பழனிசாமி ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களுக்குச் செவ்வி அளித்தார்.

அந்தச் செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதனால் பொதுமக்கள் அரசு சொல்லும் வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

# டிரம்ப்புடன் மோடி நேற்று தொலைபேசியில் பேச்சு



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொலைபேசியில் பேசினார்.

கறுப்பினத்தவரான ஜார்ஜ் ஃபிளாய்ட்டின் படுகொலையால் அமெரிக்காவின் பல மாநிலங்களிலும் பெரும் போராட்டங்களும் வன்முறைகளும் வெடித்துள்ள நிலையில் இரு நாட்டுத் தலைவர்களும் தொலைபேசியில் பேசிக்கொண்டனர்.

அவர்களின் பேச்சில் கொரோனா பெருந் தொற்று குறித்த விடயமும் வேறு பல விடயங்களும் ஆராய்ப்பட்டன என்பதற்கு மேல் என்ன பேசப்பட்டது என்பது தொடர்பில் தகவல்கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை.

# தலை முடி திருத்தவும் ஆதார் இனி அவசியம்

தமிழ்நாட்டில் திறக்கப்பட்டுள்ள முடிதிருத்தகங்கள், அழகு நிலையங்களுக்குச் செல்லும் வாடிக்கையாளர்களின் தொலைபேசி எண், ஆதார் விவரங்களைச் சேகரிக்கும்படி பேரிடர் அபாய குறைப்பு முகமை உத்தரவிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக மூடப்பட்ட அழகு நிலையங்கள், முடி திருத்தும் நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் படிப்படியாகத் திறக்கப்பட்ட நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி கடைகளின் வாயிலில் கைகளைச் சுத்தம் செய்வதற்கான வசதிகளும் அங்கு வருபவர்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண், ஆதார் எண் ஆகியவற்றின் விவரங்களைப் பெற வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனால் குறித்த சேவைகளை நாடுவோர் ஆதார் அட்டை வைத்திருப்பது கட்டாயம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடிக்குப் போட்டியாக ராகுல் உரை சமூக வலைதளத்தில்



புதுடெல்லி,ஜூன்03

ராகுல்காந்தி ஏற்கனவே பேஸ்புக் மற்றும் டுவிட்டர் தளங்களை பயன்படுத்தி வருகிறார். அதில் டுவிட்டரில் 14 லட்சத்து 40 ஆயிரம் பேரும், பேஸ்புக்கில் 3 லட்சத்து 20 ஆயிரம் பேரும் பின் தொடர்பவர்களாக (பாலோவர்ஸ்) உள்ளனர்.

டுவிட்டர் தளத்தில் சமீபத்தில் வெளிமாநில தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து அவர் பல்வேறு கருத்துக்களையும், வீடியோக்களையும் வெளியிட்டார்.

இது நல்ல வரவேற்பை பெற்றது. மேலும் நிபுணர்களின் கருத்துக்களை கேட்டு அவற்றையும் வெளியிட்டார்.

இதேபோன்ற ஒரு நிகழ்ச்சியை தொடர்ந்து சமூக வலைதளத்தில் வெளியிட ராகுல்காந்தி திட்டமிட்டுள்ளார். அதாவது பிரதமரின் மான் கி பாத்துக்கு போட்டியாக இது வெளிவரும்.

அதில் அவருடைய உரை மட்டும் அல்லாமல் அவர் பங்கேற்கும் கலந்துரையாடல்களும் இடம்பெற செய்ய இருக்கிறது. இது விரைவில் வெளிவர இருப்பதாக கட்சி நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சிறந்த இணைப்பாட்டம்









**பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்**

அது 2006. என்னதான் விரைவுணவுக் கலாசாரம் வந்து கவர்ந்தாலும், வீட்டில் ஆற அமர இருந்து, சுவையான கறிகளுடன் சோற்றை நிதானமாகச் சாப்பிட வாய்த்தால், ஒரு பெரு மகிழ்ச்சி கிளர்வதுபோல், இலங்கைக் கிரிக்கெட் இரசிகர்கள் உணர்ந்த வேளை அது.

ஆம், வீரர்களின் நிதானத்தை இரசிக்க முடியுமான டெஸ்ட் போட்டியை, இலங்கை மைதானத்திலேயே காண முடிந்த குதூகலம் அவர்களுக்கு. அப்போது தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இலங்கையில் விளையாட வந்திருந்தது. முதல் டெஸ்ட் போட்டி. கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் எங்கும் சன வெள்ளம்.

அப்போது, தென்னாபிரிக்கா ஓர் உறுதியான அணி. ஆஸ்வெல்பிரின்ஸ் தலைமையில், கிப்ஸ், அம்லா, டிவில்லியர்ஸ், பௌச்சர் என மிரட்டிய அணி அது. இலங்கையும் சளைத்ததில்லை. இலங்கைஅணிக்குத்தலைவர்மஹேல ஜயவர்த்தன. அதனோடு அதிரடி வீரர் சனத் ஜனசூரிய ஓய்வு பெறாமல் விளையாடிக் கொண்டும் இருந்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவால் எதிர்பார்த்தபடி விளையாட முடியவில்லை. முரளியின் சுழல் மிரட்டியது. மொத்தம் அவர்களால் பெறமுடிந்த ஓட்டம் 169 தான். தொடர்ந்து இலங்கை அணி மைதானம் இறங்கியது. பெரும் எதிர்பார்ப்பு. தொடக்க வீரர்களாக ஜனசூரியவும் உபுல் தரங்கவும் வந்தனர்.

பெருத்த எதிர்பார்ப்போடு காத்திருந்த இரசிகர்களுக்கு பலத்த ஏமாற்றம். இரண்டாவது ஓவரில் தரங்க ஓய்வறை திரும்ப, நான்காவது ஓவரில் ஜனசூரியவும் நடையைக் கட்டினார். வெறும் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கட் என்ற பரிதாபகரமான நிலையில் இருந்தது இலங்கை. இது, பந்து வீச்சாளர்களுக்கான மைதானம். அதுதான் இலங்கையின் துடுப்பாட்டத் தூண்களும் சரிகின்றன என, மெல்லமெல்ல சமாதானம் தேடுகிற மனநிலையில் இரசிகர்கள்.

அப்போதுதான் மூன்றாவது விக்கட்டுக்காக குமார் சங்கக்காரவும் மஹேல ஜெயவர்தனவும் ஜோடி சேர்ந்தனர். அவர்களுடைய நிதானம், ஆற்றல் வாய்ந்த பந்துவீச்சாளர்களுக்கு எதிரான துணிவு, என்பன இணைய இலங்யை கரையேறியது. ஆம், இன்றளவும் உலக டெஸ்ட் வரலாற்றில் சிறந்த இணைப்பாட்டமாக விளங்குகின்ற சாதனையை இந்த ஜோடி அந்த டெஸ்டில்தான் படைத்தது. அவர்களால் பெறப்பட்ட பெரும் ஓட்டத்தொகை 624 ஆகும். 14 ஆண்டுகளாகியும் இவ் இணைப்பாட்டச் சாதனை எந்த ஜோடியாளும் முறியடிக்கப்படாமல் உள்ளது. இச் சாதனை இணைப்பால், இலங்கை அந்தப் போட்டியில் ஓர் இன்னிஸாலும் 153 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. அவ்வெற்றியை இலங்கை மக்கள் அனைவரும் தங்கள் வெற்றியாகக் கொண்டாடினார்கள்.

அப்படியொரு மனநிலையை ஓய்வுபெற்ற பின்பும் இலங்கை மக்களுக்கு சங்கா - மஹேல ஜோடி மீண்டும் இணைந்து கொடுத்திருக்கிறார்கள். இந்த முறை அவர்களின் ஆடுகளம் அரசியல்.

கொரோனாவின் கொடிய பிடிக்குள் இலங்கை தடுமாறி, அதன் அனைத்துத் துறைகளும் ஸ்தம்பிதம் அடைந்திருக்கும் இக்காலப் பகுதியில், - அரசால் வழங்கப்படும் 5,000 ரூபா உதவித்தொகைக்காக, பல மக்களும் அலைந்து திரியும் இவ்விடர்க் காலத்தில், வெளிவந்த ஒரு செய்தி அனைவரையும் ஆச்சரியப்படவைத்தது.



**‘வட கிழக்குப் பகுதியில் ஆற்றல் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் உள்ளனர். அவர்களுக்குப் போதிய வளங்கள் தரப்படவில்லை. அவர்களுக்கும் வாய்ப்புகளை பாரபட்சமின்றி வழங்கினால், தேசிய அணிக்கு உள்வாங்கக் கூடிய தரமான வீரர்களைக் கண்டடைய முடியும்’ - என்றது சங்கா - மஹேல ஜோடி.**

ஹோமாகம பிரதேசத்தில் 26 ஏக்கர் நிலப்பரப்பில் 60,000 பார்வையாளர் ஆசனங்களைக் கொண்ட சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை 40 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இலங்கை அரசும் கிரிக்கெட் சபையும் அமைப்பது என்று வந்த செய்தியே அது.

என்ன கொடுமை இது! நாட்டில் வைரஸ் தொற்றுக்கு மத்தியிலும் 5,000 ரூபாவுக்காக முட்டிமோதி அலைக்கழியும் மக்கள் ஒருபுறம். மறுபுறம் 40 மில்லியனை மைதானத்துக்காகச் செலவழிக்கத் தயாராகும் அரசு.

நோய்த் தொற்றின் பேரில் அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் தள்ளிப் போய்க்கொண்டேயிருந்த நிலையிலேதான் அமைச்சர் ஒருவர், கிரிக்கெட் சபை நிர்வாகிகளுடன் ஹோமாகமவில் மைதானம் அமையவிருக்கிற இடத்தைப் பார்க்கப்போனார். அப்போது பிடிக்கப்பட்ட படங்கள் செய்திகளில் வந்ததும் - மக்களில் பெரும்பான்மையோர் மனங்களில் அது கருத்துக் கொதிப்பை ஏற்படுத்தியது.

ஆனால், தொடக்கத்தில் யாரும் இது பற்றி வெளியே மூச்சு விடவில்லை . இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கருத்துச் சொல்பவர்களுக்கு கவனிப்பு எப்படி இருக்கும் என்பதை இலங்கை மக்கள் நன்றாகவே அறிவார்கள். சாணை பிடிக்க வேண்டிய எதிர்க்கட்சியோ அல்லது எதிர்க் கட்சிகளோ கடுந் தூக்கத்தில்.

இந்த ஆட்சிக்கு எதிராக உண்மையில் கருத்துச் சொல்ல ஒரு துணிச்சல் அவசியம். அந்த வரலாற்றுப் பாடம் படித்த பலரும் மௌன விரதம் கடைப்பிடித்துக் கொண்டிருந்த வேளையில், எதிர்க் கட்சிகளுக்கு இருந்திருக்க வேண்டிய அரசை நேர் செய்யும் கடப்பாட்டுடன் ஒருவர் வலைத்தளத்தில் தன் கருத்தை முதலில் பதிவிட்டார். அவர், மஹேல ஜயவர்த்தன.

’தேசமே இடருற்றிருக்கும் வேளையில், பெருந் தொகைச்செலவில் மைதானம் இப்போது தேவையா?’ - என்றது மஹேலவின் வலைத்தளம். அவரைத் தொடர்ந்தார்கள் ரொசான் மகாநாம மற்றும் அர்ஜூன ரணதுங்க போன்ற முன்னாள் கிரிக்கெட் பிரபலங்கள்.

’கடந்த 3 ஆண்டுகளில் தம்புளையிலும் ஹம்பாந்தோட்டையிலும் அமைந்துள்ள மைதானங்களில் தலா ஒவ்வொரு சர்வதேச போட்டி மாத்திரமே நடைபெற்றுள்ளது. இந்நிலையில் புதிதாக மைதானங்களை நிர்மாணிப்பதில் என்ன பயன்?’ என்றார் அர்ஜூன ரணதுங்க.

அவ்வளவுதான். பற்றியது நெருப்பு. தாச்சி வைத்ததுதான் மஹேல. பிறகு, வறுத்தெடுத்து இறக்கியதெல்லாம் இலங்கை இளைஞர்கள்தான்.

கடந்த ஆட்சிக் காலத்தில் சம்பளத்தில் அறவிடப்பட்டு வந்த வரியை, புதிய ஜனாதிபதியின் ஆட்சி, நீக்கி மக்களை வீறாப்புப் பேச வைத்திருந்தது. ‘பார்த்தாயா இந்த அரசை வரிச்சுமையை நீக்கிவிட்டதே’ என்று சம்பளத்தை மட்டுமே நம்பிச் சீவிக்கிற பலரும் வாயூறிச் சொல்லியபடி இருந்தார்கள். அதை வைத்து நாடாளுமன்றத் தேர்தலிலும் வாக்களிக்கத் தயாரானார்கள். அந்தவேளையில்தான்... எங்கிருந்தோ வந்துவிட்டது பாழாய்போன கொரோனா.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் ஆக்கிரமிக்கப்பட்ட குளக்காணிகள்; கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் அதிரடி!








வவுனியா, ஜூன் 03.

வவுனியாவில் குளக் காணிகளை அத்துமீறி ஆக்கிரமித்திருந்தவர்களுக்கெதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குளக்காணிகளை அத்துமீறி அபகரிப்பதற்கு முன்னெடுக்கப்பட்டு வந்த முயற்சிகளை முறையடிக்கும் வகையில், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் வவுனியா அலுவலகத்தினால் கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரமும், காணி மீளப்பெறுகை சட்டத்திற்கமையவும் நேற்று இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பட்டாணிச்சூர் புளியங்குளம், கோவில் குளம் ,வேப்பங்குளம் , ஓயார் சின்னக்குளம் ஆகிய 4 குளங்களில் - ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் போடப்பட்டிருந்த வேலிகள் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், பொலிஸாரின் நேரடித் தலையீட்டில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. குளங்களை அத்துமீறி ஆக்கிரமித்து, வயல் நிலங்களை மேட்டு நிலங்களாக்கும் செயற்பாட்டை மேற்கொண்டவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கசிப்புக் காய்ச்சியவர்கள் களுத்துறையில் கைது!



களுத்துறை, ஜூன் 03

களுத்துறை, கித்துலாவ பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸார் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, கித்துவாவ - கமகொட பகுதியைச் சேர்ந்த 30, 40 வயதுகளையுடைய இருவரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

சந்தேக நபர்களிடமிருந்து கசிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு தொகை உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.




# புத்தளம் – அ'புரம் வீதியில் விபத்து பொலீஸ் உத்தியோகத்தர் மரணம்

புத்தளம் - அநுராதபுரம் வீதியில் நேற்று செவ்வாக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தொன்றில் புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அம்பன்பொல, அம்பகொலவெவ பகுதியைச் சேர்ந்த 30 வயதான டி.எம். பியந்த என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ் விபத்தில் உயிரிழந்துள்ளதார் என கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை தனது வீட்டில் இருந்து புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் தப்போவ பகுதியில் வீதியை விட்டுவிலகி அருகிலிருந்த பாதுகாப்பு கொங்ரீட் கல்லில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# 8 ஆம் திகதி முதல் 3 நாள்கள்
# டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

கொழும்பு, ஜூன் 03

எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்கள் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் அறிவிக்கப் பட்டுள்ளதாக மாவட்டத்தில் சகல சுகாதார வைத்திய அதி காரிகள் பிரிவிலும் இந்த டெங்கு கட்டுப்பாட்டு வாரம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார். நேற்றுப் பண்ணையில் உள்ள சுகாதார கிராமத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் பொதுவாக வடகீழ் பருவப் பெயர்ச்சி மழையின் பின்னரும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழையின் பின்னரும் டெங்கு நோயின் பரவ லானது அதிகரிப்பது வழமை அதேபோன்று இந்த வரு டத்தின் ஜனவரி பெப்ரவரி மாதங்களில் டெங்குநோய் பரவுவது அதிகரித்து காணப்பட்டது. அதன் பின்னர் அது படிப்படியாக குறைந்து காணப்பட்டது.

தற்போது கடந்த மாதம் பெய்த மழைக்குப் பின்னராக வடக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில்டெங்குநோய்பரம்பல்அதிகரித்துச்செல்வதை நாங்கள் காணக்கூடியதாக உள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையில் பல நோயாளர்கள் யாழ் மாவட்டத்தில் பல இடங்களிலிருந்தும் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருக்கின்ற நிலையினை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இன்று வரையான காலப்பகுதியில் இந்த வருடத்தில் 2 ஆயிரத்து இருநூறுக்கும் மேலான நோயாளர்கள் டெங்கு நோயின் தாக்கத்தினால் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த டெங்கு நோயை கட்டுப்படுத்த வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் அனைவருக்கும் இருக்கின்றது.

இந்த டெங்கு நோய் கட்டுப்பாட்டினை சுகாதாரபிரி வினர் மட்டும் தனித்து செயற்படுவதன் மூலம் கட்டுப்படுத்தி விட முடியாது. இதிலே பல திணைக்களங்கள் நிறுவனங் கள் பொது மக்கள் அனைவரது பங்களிப்பும் இருந்தால் மட்டுமே தான் இந்த டெங்கு நோயினை வடக்கு மாகா ணத்தில் முற்றாகக் கட்டுப்படுத்த முடியும்.

அந்த அடிப்படையில் யாழ்மாவட்டத்திலே ஜூன் முதல் வாரம் டெங்கு ஒழிப்பு வாரம் அரச அதிபரினால் அறிவிக்கப் பட்டிருந்தது. இந்த வார காலப்பகுதியில் பொதுமக்கள் தங்களுடைய வீடுகளை தங்களுடைய சுற்றாடலினை துப்புரவு செய்வதன் மூலம் டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய இடங்களினை கட்டுப்படுத்த முடியும். இந்த டெங்கு நோயிலிருந்து தங்களை பாதுகாக்க முடியும். அதே போன்று வேலைத்தளங்கள் பொது இடங்கள் பொதுமக் கள் சிரமதான அடிப்படையில் பணியாற்றி தங்களுடைய அலுவலகங்களில் பொது இடங்களினை துப்புரவாக்கி டெங்கு ஒழிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

இந்த டெங்கு நோயின் கட்டுப்பாட்டுக்காக மட்டு மன்றி சுகாதார நடவடிக்கையினை மேம்படுத்தும் முக மாக வட மாகாணம் முழுவதிலும் ஒவ்வொரு கிராம மட் டத்தில் கிராம மட்டசுகாதார மேம்பாட்டுக் குழு ஒன்றினை ஆரம்பித்திருக்கிறோம். அந்தக் குழுவானது ஆரம்பிக்கப் பட்டு திறமையாக செயற்படும்போது சகல நோய்களுக்கு மான கட்டுப்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

அதாவது கிராம மட்ட சுகநல மேம்பாட்டுக்குழு அர சாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய ஒவ்வொரு பிர தேசத்திலும் அந்தந்த பிரதேசத்தின் கிராமசேவையாளர் தலைவராகவும் செயலாளராக அந்தப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் நியமிக்கப்பட்டு அந்தக் குழுக்கள் மிகவும் சிறப்பாக செயல்படவுள்ளது.

அந்தக் குழுவிலே அப்பகுதியில் உள்ள அரசாங்க உத்தியோகத்தை சேர்ந்தவர்கள் மற்றும் பல்வேறு தரப் பட்டவர்கள் அந்த குழுவில் உள்ளடக்கப்பட்டு அந்த குழு திறமையாகச் செயற்படுமிடத்து சகல நோய்களுக்கு மான அறிவுறுத்தல்கள் அப்பகுதியில் வழங்கப்பட்டு நோய்களை கட்டுப்படுத்த முடியும்.

குறிப்பாக இந்த குறித்த செயற்பாட்டினை திறமை யாகச் செயற்படுத்துவதன் மூலம் டெங்கு நோய் மட்டு மன்றி ஏனைய நோய்களையும் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நட வடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும் வினைத்தி றனாக முன்னெடுத்துச் செல்வதற்கும் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் அறிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் ஜூன் மாதம் 8 ம் திகதி முதல் மூன்று நாட்கள் இந்த டெங்கு கட்டுப் பாட்டு வாரம் அறிவிக்கப் பட்டுள்ளது. மாவட்டத்தில் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிலும் இந்த டெங்கு கட்டுப்பாட்டு வாரம் முன்னெடுக்கப்படவுள்ளது. எனவே அரசாங்க அதிபரின் வழிநடத்தலின் கீழ் சகல பிரதேச செயலாளர்களுக்கும் இந்த டெங்கு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் ஜூன் எட்டாம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது – என்றார்.

சசிகா லேணர்ஸ்



தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றத் தரப்படும்.

HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# குருநாகல் மாவத்தகம பகுதித் தோட்டங்களில் வெட்டுக்கிளிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை



குருநாகல் மாவட்டம், மாவத்தகம பகுதியில் ஒருவாரத்தும் மேலாக பயிர்களுக்கு சேதம் விளைவித்துவரும் வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்தார்.

மாவத்தகம, கட்டுப்பிட்டிய எட்வட் தோட்டப் பகுதியில் ஒருவகை வெட்டுக்கிளிகள், தென்னை, வாழை, சோளம், மரவள்ளி, பப்பாசி போன்ற பயிர்களை சேதப்படுத்தி



வருவதுடன் இதனால் விவசாயிகள் பாரிய பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

வெட்டுக்கிளிகளை அழிப்பதற்காக, ஒருவகை கிருமிநாசினி தெளிக்கப்பட்டப் போதிலும் அது பலனளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையிலேயே, இந்த வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கான கிருமிநாசினியைக் கண்டுபிடிக்குமாறு, விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.டபிள்யூ. வீரக்கோன், பேராதெனிய விவசாய ஆராய்ச்சி நிலையத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் வெட்டுக்கிளிகள் சில பிடிக்கப்பட்டு, பேராதெனிய விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பல மாநிலங்களில், ஒருவகை வெட்டுக்கிளிகளின் தாக்கத்தால் பயிர்ச்செய்கைகள் அழிவடைந்து வருகின்ற நிலையில், வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கான நடவடிக்கையில் மாநிலங்கள் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், இலங்கை யில் பரவியுள்ள வெட்டுக்கிளி களை இந்தியாவுக்கு அனுப்பி பரிசோதனைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெட்டுக்கிளிகள் படையெடுத்துள்ள மாவத்தகம, கட்டுப்பிட்டிய எட்வட் தோட்டத்துக்கு, நேற்று விஜயம் செய்த வடமேல் மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில், வெட்டுக்கிளிகளின் தாக்கத்ததால் பாதிக்கப்பட்ட வாழைத் தோட்டம், தெங்கு பயிர்ச் செய்கைகளை நேரடியாகப் பார்வையிட்டார்.

இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதலளித்த அவர், விவசாயி களை அச்சுறுத்தி வரும் இந்த வெட்டுக்கிளி களை முற்றாக இல்லாமற் செய்து கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வருவதற்கான சகல ஏற்பாடுகளையும் விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களத்தின் மூலம் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கான பூச்சிநாசினி விசிறும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெங்கு ஆராய்ச்சி நிலையத்தின் ஆதரவுடன் பூச்சியல் வல்லுநர்கள், பயிர் வல்லுநர்கள், மற்றும் பிராந்திய விவசாய இயக்குநர்கள் ஆகியோர் இணைந்து, வெட்டுக்கிளிகளின் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெட்டுக்கிளிகளை உடன் அளிக்காவிடின் அவை ஓரிரு நாள்களில் 500 மடங்காக பெரிகிவிடும் என்று, வடமேல் மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் டபிள்யூ.ஏ.சீலரத்ன தெரிவித்தார்.

## கொழும்பு மேயர் பதவியில் இருந்து விலகுகிறார் ரோஸி

கொழும்பு, ஜுன் 3

கொழும்பு –நகரசபையின் மேயர் பதவியில் இருந்து ரோஸி சேனாநாயக்கவை நீக்க ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியின் விவகாரங்களில் அவர் பங்கேற்காமல் இருக்கின்றமையே இதற்கு காரணமென கூறப்படுகின்றது.

கொழும்பு நகராட்சி மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்புடன் சிறிகொத்தாவில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும் கொழும்பின் துணை மேயர், முகமது இக்பால் அடுத்த கொழும்பு மேயராக முன்மொழியப்பட்டதாக அக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றது.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.


## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

சுன்னாகம் கொத்தியாவத்தையைப் பிறப்பிடமாகவும்
இருபாலை V.H. ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
### தம்பிப்பிள்ளை குருநாதன்



எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் எமது இல்லங்களுக்கு நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும் மற்றும் அன்னார் நோயுற்ற வேளையில் உதவி புரிந்தவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் இன்று வரை உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அப்பா உங்களோடு நாங்கள் வாழ்ந்த
காலங்களை எண்ணிக் கலங்குகின்றோம்
பாதிவழியில் எங்களை மறந்து சென்றீரே!

கலங்கும் கண்களுடன் கனத்த இதயத்துடன்
நாங்கள் உம் முகம் தேடி குரல் தேடி
வேதனையில் ஏங்கித் தவிக்கின்றோம்!

எத்தனை உறவுகள் எம்மைத் தேடி வந்தாலும்
அப்பாவே உமக்கீடாகுமா எவையுமே!

உங்கள் பாசத்திற்காக ஏங்கித் தவிக்கும் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்று 03.06.2020 புதன் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.



# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘பட்டிமன்றம்’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.



படம் 1



படம் 2

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு– ‘பட்டிமன்றம்’

**படம் 1**
பி. பிரவீன் - தரம் 11
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

**படம் 2**
ஆர். அஜின் - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கே. நிருஜிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

ஆர். பிரிதி - தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எட்ரியன் லுகி ஜோன் - தரம் 8
ஓகேஜசர்வதேசபாடசாலை,வத்தளை

து. ஷாருக்சன் - தரம் 2
தி/உவர்மலைவிவேகாநந்தாகல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

ஞா. ரிசாந் - தரம் 3
தி/உவர்மலைவிவேகாநந்தாகல்லூரி

மாதுரி மகிந்தன் - தரம் 8
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

காலைக்கதிர் Kalaikkathir

பரிசளிப்பு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

**இன்று (03/06/2020) தலைப்பு**
**பரிசளிப்பு**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலக வளாக ஆலயத்தை அகற்றும் திட்டம் முறியடிக்கப்பட்டது

## சர்ச்சைக்குரிய வழக்கில் நேற்று நீதிமன்றம் தீர்ப்பு

(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை வடக்கு பிரதேச செயலக ஆலய வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணை செய்ய விடேமாக பொறுப்பளிக்கப்பட்ட நீதிபதி த.கருணாகரன் வழக்கை விசாரித்து மனுவில் உள்ள குறைபாடு காரணமாக வழக்கை தள்ளுபடி செய்துள்ளார்.

இவ்வழக்கிற்கென மட்டக்களப்பிலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட மட்டக்களப்பு நீதிவான் த.கருணாகரன் காலை 9.30மணியளவில் மன்றுக்கு வந்ததும் முதல் வழக்காக சர்ச்சைக்குரிய வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கில் குறிப்பிடப்பட்ட திகதிகளில் முரண்பாடு காணப்பட்டதனாலும் ஆலயம் அமைப்பதற்கான முறைப்படியான கடிதப்போக்குவரத்துகள் நடைமுறையில் இருக்கின்றதனாலும் இவ்வழக்கு குறைபாடுள்ளதாகின்றது என சுட்டிக்காட்டப்பட்டது.

வழக்குத் தள்ளுபடி செய்யப்படுகிறது என அறிவித்துவிட்டு நீதிவான் இறங்கியதும் மன்று கலைகிறது எனக்கூறப்பட்டது. பின்னர் வழமையான நீதிவானுடன் மன்று மீண்டும் கூடியது குறிப்பிடத்தக்கது.

நேற்று ஆலயம் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிவரஞ்சித் மற்றும் சட்டத்தரணி தெய்வநாயகம் மதிவதனன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் மன்றில் ஆஜராகியிருந்தார்.





பிரதேசசெயலகத்தில் நீண்டகாலமாக ஊழியர்களால் வழிபட்டு வந்த இவ்வாலயம் சட்டரீதியற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் நீண்ட காலமாக வழக்கு நடைபெற்றுவந்திருந்தது.

என்ன நடந்தது? வழக்குவிபரம் இதோ:-

கல்முனை தமிழ் பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட பிள்ளையார் ஆலயத்தை அகற்றவேண்டுமென கல்முனை மாநகரசபை மேயர் எ.எம்.றக்கீப் கல்முனை நீதிமன்றில் 2018.10.30இல் தானே வழக்குத் தொடர்ந்திருந்தார்.

சட்டரீதியாக நகரஅபிவிருத்தி பிரிவில் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடம் அது. எனவே அதனை இடிக்கவேண்டும் என அவரே வழக்கு தாக்கல்செய்திருந்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்படாமல் கட்டப்படுகின்ற சட்டவிரோத கட்டடம் இது என்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை கையளித்து உள்ள அதிகாரத்தின்படி இக்கட்டடத்தை இடிக்க கோருகின்ற உரிமை அவருக்கு உள்ளது என்றும் முதல்வர் றஹீப் சார்பாக நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இவரின் சமர்ப்பணம் கல்முனை மேலதிக நீதிவான் பயாஸ் ரஸாக் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இச்சட்டவிரோத கட்டடத்தின் நிர்மாணத்தை ஆட்சேபித்து இவரால் அனுப்பப்பட்ட இரு கடிதங்களுக்கு தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளரால் பதில் விளக்கம் தரப்படாத நிலையிலேயே நீதிமன்றத்தை நாடி வந்து உள்ளார் என்றும் சமர்ப்பணத்தில் தெரிவிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி இது தொடர்பான ஆவணங்களை 14 நாள்களுக்குள் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்..

இக்கட்டடம் ஏன் இடிக்கப்பட கூடாது என்று ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க தமிழ் பிரிவு பிரதேச செயலாளருக்கு இரு வார கால அவகாசம் வழங்குவதாக அறிவித்துதமிழ் பிரதேச செயலாளர் ஆஜராக வேண்டும் என்று அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர முதல்வரை ஆதரித்து சட்டத்தரணிகளான ரொஷான் அத்தார், முஹைமீன் காலித், அன்ஸார் மௌலானா ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

அதனையடுத்து பிரதேச செயலாளர் ஏ.ஜே.அதிசயராஜ் சட்டமாஅதிபர் திணைக்களத்திற்குச்சென்று சட்டமா அதிபருக்கு தெரிவித்து வழக்கிற்கான பதில் சமர்ப்பணத்தை சிரேஷ்ட அரச சட்டத்தரணியுடன் கலந்துரையாடி வழக்கு தொடர்பாக அரசதரப்பு விளக்கங்களை பெற்றிருந்தார்.

இந்த ஆலய விவகாரம் அப்போது இப்பிரதேச தமிழ் மக்களிடம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தனியான நிருவாகம், ஆளணி, முகாமைத்துவம், நிருவாக எல்லைகளுடன் இயங்குகின்றபோதும் இதனை தரமுயர்த்த விடாது கடந்த 30 வருடங்களாக சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி தடுத்துவருகின்ற அதே வேளை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஊழியர்களால் வழிபட்டு வரும் வணக்க தலத்தை அகற்றுவதற்கு தற்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் கல்முனை மாநகரசபை மேயர் வழக்கு தாக்கல் செய்துள்ளமையும் அன்று பரவலாக வேறொரு கண்ணோட்டத்துடன் பார்க்கப்பட்டுவந்தது.

சுமார் ஒன்றரை வருடகாலத்தின்பின்னர் அந்த சர்ச்சைக்குரிய வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டுள்ளது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

# சிறந்த இணைப் ...........

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலை இல்லை ஆனால், சம்பளம் உண்டு. உல்லாசத்துக்கு யாரும் வரவில்லை. ஆதலால் நாட்டுக்கு வருவாய் இல்லை. ஆடைகள் தைக்கப்படவில்லை. ஆகவே, ஏற்றுமதி இல்லை.

இத்தகைய இடர் வேளையில், நிதி முகாமைத்துவத்துக்கும் கடன் பெறுதற்கான அனுமதி தருதற்கும் நாடாளுமன்றம் கூட இல்லை. அது கலைக்கப்பட்டாயிற்று. மக்களிடம் பிச்சையெடுத்தாலும் பரவாயில்லை, அதைக் கூட்டுவதேயில்லை என்ற பிடிவாதம் ஆளுங்கட்சிக்கு.

இந்நிலைமை, சம்பளத்தில் வரி வெட்டப்படும் நிலையை மீண்டும் கொண்டுவந்துவிட்டது. இனிமேல் தான் என்றில்லை. இதுவரை வெட்டப்படாத முன்னைய மாத வரிகளும் அடுத்தடுத்த சம்பளங்களில் வெட்டப்படும் என அறிவிக்கப்பட்டாயிற்று.

இவ்வாறு, ஒருபுறம், கொரோனாவால் இலங்கையின் பொருளாதாரம் நலிந்து விட, 'இதோ நான் ஒரு மாதச் சம்பளத்தைத் தேசத்துக்காக வழங்குகிறேன். நீங்களும் தாருங்கள் என்கிறார் ஜனாதிபதியின் ஆலோசகர்.' அவ்வளவு நெருக்கடி.

ஆனால், மறுபுறம், உள்ள மைதானங்களே பயன்படுத்தப்படாத நிலையில், அவசியமற்ற ஒன்றுக்காக மில்லியன் கணக்கில் டொலரைச் செலவழிக்கும் பொறுப்பின்மை அவர்களிடம்.

இப்பொறுப்பின்மை கண்டு, மக்களிடம் ஏற்பட்ட வெறுப்பு, தேர்தலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் ஆபத்தானதென நினைந்த பிரதமர், உடனே அதைத் தணிப்பதற்காக, கிரிக்கெட் சபையினரையும் முன்னாள் கிரிக்கெட் வீரர்களையும் அலரிமாளிகையில் கூட்டிக் கலந்துரையாடினார்.

அங்கேதான் மீண்டும் தொடங்கியது மஹேல - சங்கா இணைப்பாட்டம். அச்சபையில், இன்றைய அரசின் ஆட்சியாளர்கள் மத்தியில் இருவரும் இணைந்து வழங்கிய கருத்துகள் உண்மையில் நிதானமும், துணிச்சலும் மிக்கவை.

'இன்றைய நிலையில் மைதானத்துக்குக் கொட்டும் பெருந்தொகைப் பணத்தைக் கொண்டு, மாணவர் கல்வித் தரத்தையும் கிராமப்புறப் பாடசாலைகளின் விளையாட்டுத் தரத்தையும் பாடசாலைக் கிரிக்கெட் தரத்தையும் மேம்படுத்த முடியும்' எனவும், 'இப்பணத்தில் அபிவிருத்தி செய்யப்படவேண்டியிருக்கிற பழைய மைதானங்களைப் புனரமைக்க முடியும்' எனவும் எதிர்கால இலங்கையைக் குறித்து அவர்கள் கருத்துரைத்தனர்.

அது மட்டுமல்ல...

அடுத்து அவர்கள் சுட்டிய கருத்து மிகமிக முக்கியமானது.

'வடகிழக்குப் பகுதியில் ஆற்றல் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் உள்ளனர். அவர்களுக்குப் போதிய வளங்கள் தரப்படவில்லை. அவர்களுக்கும் வாய்ப்புகளை பாரபட்சமின்றி வழங்கினால், தேசிய அணிக்கு உள்வாங்கக் கூடிய தரமான வீரர்களைக் கண்டடைய முடியும்' - என்றது சங்கா - மஹேல ஜோடி.

இந்த உண்மையை அவர்கள் ஆணித்தரமாக, பிரதமர் உள்ளிட்ட பிரபலங்களுக்கு முன்பாக துணிந்து கூறியது பாராட்டுக்குரியது.

ஆம்.. இந்த இடத்தில்.. இந்த அரசில் .. தம் கருத்தை இப்படித் துணிந்துரைப்பதும் ஒரு பெரிய சாதனைதான்.

முன்பு மைதானத்தில் சேர்ந்த இணைப்பாட்டத்தினால் இலங்கை மக்களுக்கு வெற்றியைப் பரிசளித்தது போல, இன்று, மைதானத்துக்கு வெளியே சேர்ந்து மீண்டும் ஒருதரம் மக்களுக்கு வெற்றியைக் கொடுத்துள்ளது இந்த ஜோடி.

ஆம்! அன்றைய அலரி மாளிகைக் கூட்டத்தின்பின், ஹோமாகம சர்வதேச மைதானத் திட்டம் கைவிடப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

# புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட வெடிபொருள்கள் தகர்க்கப்பட்டன





அக்கரைப்பற்று - ஆலையடிவேம்பு, இத்தியடி ஆற்றங்கரையோரத்தில் விசேட அதிரடிப்படையினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் நேற்று மாலை 6 மணியளவில் அதிபயங்கர சத்தத்துடன் வெடிபொருள்களை வெடிக்க வைத்தனர்.

கடந்த யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் வெடிபொருள்களே இவ்வாறு அதி பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இதனால் அப்பகுதி வெடி சத்தத்தால் அதிர்ந்துள்ளது.

இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக மேலதிக விசாரணைகளை அக்கறைப்பற்று பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

மேலும் அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிவான் எம்.எச்.முகம்மட் ஹம்சாவின் அனுமதியை பெற்று பொருத்தமான இடத்தில் வெடிபொருள்கள் யாவும் செயலிழக்க வைக்கப்பட்டன.

ஆர்.பி.ஜி - 04, கிளைமோர் குண்டு - 02, 60 மில்லி - 02, 81 மெகசின் - 12, 81 மெகசின் கைக் குண்டு - 02 ஆகிய வெடி பொருள்களே மீட்டு செயலிழக்க வைக்கப்பட்டன.

# கே.பி. போலவே மகேந்திரனையும் அரசு கைது செய்து கொண்டு வரும்

## அமைச்சர் விமல் வீரவன்ஸ நம்பிக்கை



கொழும்பு,ஜூன் 3

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களைக் கையாண்ட கே.பி. என்ற குமரன் பத்மநாதனை வெளிநாட்டிலிருந்து கைது செய்து அழைத்துவந்தமை போல, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனையும் அரசாங்கம் கைது செய்து அழைத்துவரும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவிக்கின்றார்.

இதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பில் பேசியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.




# மட்டு. வெல்லாவெலியில் யானைக்குப் போட்ட வேலியின் மின்சாரம் பாய்ந்ததால் விவசாயி பலி!

மட்டக்களப்பு, ஜூன் 03

யானைக்குப் போடப்பட்டிருந்த மின் வேலியில் சிக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை, மட்டக்களப்பு, வெல்லாவெளி 39ஆம் கொலணியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சமிபவத்தில் 39 கொலணி, ஈயாக்காளி பகுதியில் விவசாய செய்கையில் ஈடுபட்டு வந்த தும்பங்கேனி கிராமத்தை சேர்ந்த 58 வயதான சீனித்தம்பி சந்திரசேகரம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஈயாக்காளி குளத்தை அண்டிய பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டுவருகின்ற விவசாயிகள், யானைகளின் அச்சுறுத்தல் காரணமாகப் பெரும் இழப்புகளை எதிர்கொண்டு வந்துள்ளனர். யானைகளிடமிருந்து தமது வயல்களைக் காக்கும் நோக்கில் வயல் நிலங்களைச் சூழ மின்சார இணைப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

நேற்று அதிகாலை வயலுக்குள் வந்த யானையை, அங்கு காவலில் இருந்த விவசாயி விரட்டியடித்துவிட்டு, தனது வயலுக்குள் செல்ல முற்பட்ட போது, வயல் வேலியில் மின்சாரம் தாக்கியதனால் அந்த விவசாயி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். அங்கு வந்த யானை, வேலியை உடைத்த நிலையில், அந்த வேலியில் இருந்த மின்சார இணைப்பு, ஏனைய வேலிக் கம்பியிலும் இணைந்திருந்தமையால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சம்வம் தொடர்பாக வெல்லாவெளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீராடச் சென்ற இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்!

கண்டி, ஜூன். 03

கண்டி ஆகலை ஆற்றில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். மடகல தோட்டத்தைச் சேர்ந்த 20 வயதான இளைஞரே நண்பர்களுடன் நீராடச் சென்றிருந்த போது உயிரி ழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக தெல்தெனிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# நாளை விடுமுறை!

கொழும்பு,ஜூன் 03

நாளை வியாழக்கிழமை அரச நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இந்த அறிவித்தலை வேளியிட்டிருக்கிறது.

நாளை 4 ஆம் திகதியும், நாளை மறுதினம் 5 ஆம் திகதியும் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதனால், அரச நிறுவனங்களுக்கு 4 ஆம் திகதி விடுமுறை தினமான அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.06.2020 இல் வெளியிடப்பெற்றது.